**செப்டம்பர் – 16**

# TNPSC துளிகள்


- கூகுள் டீப்மைண்ட் (Google DeepMind) மனித மரபணுவில் ஏற்படும் ஒற்றை மரபணு மாற்றங்களின் விளைவுகளைக் கணிக்கும் தரவுதளமான ஆல்ஃபாஜீனோம் அட்லஸை (AlphaGenome Atlas) அறிமுகப்படுத்தியது.
  - இது சாத்தியமான 9 பில்லியன் ஒற்றை-நியூக்ளியோடைடு மாறுபாடுகளின் ஒழுங்குமுறை விளைவுகளைக் கணிக்க ஆல்ஃபாஜீனோம் செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியைப் பயன்படுத்துகிறது என்பதோடு இதன் மூலம் 1-பெட்டாபைட் தரவுத் தொகுப்பை உருவாக்குகிறது.
- இந்திய விமானப்படையானது (IAF) கண்காணிப்பு, உளவு பார்த்தல், தன்னாட்சி செயல்பாடுகள், ஸ்வார்ம் (swarm) தொழில்நுட்பங்கள், மின்னணு போர்முறை மற்றும் ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்புகள் (CUAS) ஆகியவற்றைச் சோதிப்பதற்காக தனது முதல் ட்ரோனத்தான்-2026-ஐ (Dronathon-2026) ராஜஸ்தானின் ஜெய்சல்மரில் உள்ள பொக்ரான் துப்பாக்கி பயிற்சி தளத்தில் தொடங்கியது.
- ஒடிசாவில் உள்ள தலாபிரா II மற்றும் III நிலக்கரி சுரங்கமானது 2025–26 ஆம் நிதி ஆண்டில் 19.14 மில்லியன் டன்கள் (MT) என்ற தனது இதுவரை இல்லாத அதிகபட்ச ஆண்டு நிலக்கரி உற்பத்தியைப் பதிவு செய்துள்ளது.
  - இந்த திறந்தவெளிச் சுரங்கம் ஒடிசாவின் சம்பல்பூர் மற்றும் ஜார்சுகுடா மாவட்டங்களில் அமைந்துள்ளது என்பதுடன் மேலும் இது NLC இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் இயக்கப்படுகிறது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) பாதுகாப்பற்ற பூச்சிக் கொல்லிகள் காரணமாக M/s நீலகிரி ஆயில் & அலைடு இண்டஸ்ட்ரீஸ் தயாரித்த ஷாலிமார்ஸ் செஃப்-கொத்தமல்லித் தூளையும், பாதுகாப்பற்ற காட்மியம் அளவுகள் காரணமாக M/s அக்வாக்ரி ப்ராசசிங் பிரைவேட் லிமிடெட் தயாரித்த கராஜீனன் (Carrageenan) பொருளையும் திரும்பப் பெற உத்தரவிட்டுள்ளது.
  - 2017 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை (உணவு திரும்பப் பெறுதல் நடைமுறை) விதிமுறைகளின் படி, 2006 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## உலகளாவிய தடுப்பூசி உற்பத்தி

- உலகளவில் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தியாளராகவும், அளவின் அடிப்படையில் உலகளாவிய விநியோகஸ்தராகவும் இந்தியாவின் நிலையை மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எடுத்துரைத்தார்.
- உலகளாவிய தடுப்பூசி உற்பத்தியில் இந்தியா சுமார் 60% பங்கைக் கொண்டுள்ளது மற்றும் உலக சுகாதார அமைப்பின் (WHO) வழக்கமான நோய்த்தடுப்புத் தேவைகளில் 65%க்கும் மேலானவற்றை வழங்குகிறது.
- இந்தியாவின் உயிரியல் பொருளாதாரமானது 2025 ஆம் ஆண்டில் 195.3 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளதுடன், இது ஆண்டுக்கு ஆண்டு 18% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- Ind-CEPI திட்டம் இந்தியாவின் முதல் மெசஞ்சர் ரைபோநியூக்ளிக் அமிலம் (mRNA) சார்ந்த கோவிட்-19 தடுப்பூசியான 'GEMCOVAC-19'-ஐ உருவாக்கியது.

- உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT), உயிரித் தொழில்நுட்பத் துறை தொழில் ஆராய்ச்சி உதவி மன்றம் (BIRAC) மற்றும் CEPI ஆகியவற்றின் கூட்டாண்மையானது, தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் தொற்றுநோய் தயார்நிலை நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கிறது.
- BRIC-THSTI பயோ அசே (Bioassay) என்றதொரு ஆய்வகமானது, உலகளாவியத் தடுப்பூசி உருவாக்கத்திற்கு ஆதரவளிக்கும் 'தொற்றுநோய் தயார்நிலைக்கான கண்டு பிடிப்புகளின் கூட்டமைப்பு' (CEPI)-இன் 17 மையப்படுத்தப்பட்ட வலைப்பின்னல் ஆய்வகங்களில் ஒன்றாகும்.




## இந்தியாவின் தரவு மையத் திறன்





- இந்தியாவின் நிறுவப்பட்ட தரவு மையத் திறன் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி 1.57 GW ஆக அதிகரித்துள்ளது மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் கிட்டத்தட்ட 8 GW ஐ எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- மேகக் கணினி, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் சேவைகள் காரணமாக, இந்தியாவின் தரவு மையத் திறன் 2020 ஆம் ஆண்டில் சுமார் 375 MW இலிருந்து 2026 ஆம் ஆண்டில் 1.57 GW ஆக அதிகரித்துள்ளது.
- இத்துறையில் ஏற்கனவே சுமார் 70 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்யப்

பட்டுள்ளதுடன் மேலும் 90 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

- தேசிய தகவல் மையம் (NIC) டெல்லி, புனே, ஹைதராபாத் மற்றும் புவனேஸ்வர் ஆகிய இடங்களில் தேசிய தரவு மையங்களையும், 37 சிறிய மையங்களையும் இயக்குகிறது.
- தரவு மையங்களின் மின்சாரத் தேவை 2031-32 ஆம் ஆண்டளவில் 17 GW ஐ எட்டக்கூடும், இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல், திறமையான குளிரூட்டல் மற்றும் வளப் பாதுகாப்பு ஆகியவற்றின் மீதான கவனத்தை அதிகரிக்கிறது.

## NMBA நாடு தழுவிய பிரச்சாரம்

- போதைப்பொருள் இல்லா இந்தியா இயக்கமானது (NMBA - Nasha Mukt Bharat Abhiyaan) போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தனது நாடு தழுவிய பிரச்சாரத்தின் மூலம் 34.54 கோடி குடிமக்களைச் சென்றடைந்துள்ளது.
- போதைப்பொருள் துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆதரவை வழங்கவும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் 2020 ஆம் ஆண்டில் NMBA தொடங்கப்பட்டது.
- 1.67 லட்சத்திற்கும் மேற்பட்ட போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நண்பர்கள் (Nasha Mukti Mitras) இப்பிரச்சாரத்தில் இணைந்துள்ளனர், இந்தியா முழுவதும் 31.40 லட்சத்திற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு மற்றும் மக்கள் தொடர்பு நடவடிக்கைகள் நடத்தப் பட்டுள்ளன.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் 755-க்கும் மேற்பட்ட புதிய போதைபொருள் தடுப்பு மறுவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 1.67 லட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- NMBA இன் 6 வது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தேசிய மக்கள் உறுதிமொழிக்காக 10 கோடிக்கும் அதிகமான குடிமக்களைத் திரட்ட அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.





## கோபர்தன் (GOBARdhan) மத்திய துறை திட்டம் புதுப்பிப்பு

- கோபர்தன் (GOBARdhan) மத்திய துறை திட்டமானது 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1

அன்று ₹23,731 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் நடைமுறைக்கு வந்தது.

- ❖ இந்தியாவில் அழுத்தப்பட்ட உயிரி வாயு (CBG) உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அதிகரிக்க இத்திட்டம் 2035-36 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும்.
- ❖ உள்நாட்டு CBG உற்பத்தியை கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரிப்பதையும், பெரிய அளவிலான தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ கரிம கழிவுகளை பயனுள்ள ஆற்றல் மற்றும் பிற தயாரிப்புகளாக மாற்றுவதன் மூலம் சுழற்சி உயிரியல் பொருளாதாரத்தை இத்திட்டம் ஆதரிக்கும்.
- ❖ மத்திய அமைச்சரவை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.




# சர்வதேசச் செய்திகள்

## மய்யூன் தீவின் மீதான ஹவுதி கட்டுப்பாடு

- ❖ ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மய்யூன் தீவைக் கைப்பற்றி ஏமனின் செங்கடல் கடற்கரை மற்றும் பாப் அல்-மண்டாப் நீர்ச்சந்தி மீது தங்கள் கட்டுப்பாட்டை விரிவுபடுத்தியுள்ளனர்.
- ❖ மய்யூன் தீவு ஏமனின் பாப் அல்-மண்டாப் நீர்ச்சந்தியில் அமைந்துள்ளது, இது செங்கடல் மற்றும் சூயஸ் கால்வாயின் தெற்கு நுழைவாயிலாகும்.
- ❖ ஹவுதிகள் கிரேட்டர்/பெரிய ஹனிஷ் மற்றும் லெஸ்ஸர்/சிறு ஹனிஷ் தீவுகள், அண்டை செங்கடல் கடற்கரை மற்றும் ஏமனின் துறைமுக நகரமான மோச்சா ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.
- ❖ முக்கியமான சர்வதேச கடல்வழிப் பாதையான பாப் அல்-மண்டாப் நீர்ச்சந்தியைச் சுற்றியுள்ள அவர்களின் நிலையை இந்தப் பகுதிகள் வலுப்படுத்துகின்றன.
- ❖ உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளரான சவுதி அரேபியா, ஈரானின் ஹார்முஸ் நீர்ச்சந்தி முற்றுகை வளைகுடா வழியாக சரக்குப் போக்குவரத்தை

சீர்குலைத்ததை அடுத்து செங்கடல் பாதையை நம்பியுள்ளது.

- ஹார்முஸ் நீர்ச்சந்திக்கு அருகே அரபிக்கடலில் ஓமன் கடற்கரையில் எம்டி எல் கையா (MT El Gaia) என்ற வணிகக் கப்பல் மீதான தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்து உள்ளது.




## இந்தியா-மெர்கோசூர் வர்த்தக ஒப்பந்தம்




- மின்னணு தோற்றச் சான்றிதழ்களை எளிதாக்குவதற்காக இந்தியா மற்றும் மெர்கோசூர் (MERCOSUR) இடையே இந்தியா-மெர்கோசூர் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்திற்கான (PTA) முதல் கூடுதல் நெறிமுறையில் கையெழுத்திடப்பட்டது.
- இந்த நெறிமுறை டிஜிட்டல் மற்றும் காகிதமில்லா வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது மற்றும் தோற்றச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் சரிபார்ப்பதற்கும் ஆகும்

நேரத்தையும் செலவையும் குறைக்கிறது.

- இந்தியா-மெர்கோசூர் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தமானது (PTA) 2004 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று கையெழுத்திடப்பட்டது மற்றும் 2009 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்த PTA இந்தியா மூலம் 450 சுங்கவரி வரிசைகளிலும், மெர்கோசூர் மூலம் 452 சுங்கவரி வரிசைகளிலும் முன்னுரிமை வரிச் சலுகைகளை வழங்குகிறது.
- மெர்கோசூர் என்பது 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தென் அமெரிக்க பொருளாதார மற்றும் அரசியல் வர்த்தக கூட்டமைப்பாகும்.
- இதன் முழு உறுப்பினர்கள் அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், பராகுவே மற்றும் உருகுவே ஆகும்.
- வெனிசுலா ஒரு முழு உறுப்பினர், ஆனால் 1 டிசம்பர் 2016 முதல் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- சிலி, கொலம்பியா, ஈக்வடார், கயானா, பனாமா, பெரு மற்றும் சுரினாம் ஆகியவை இணை நாடுகள் ஆகும்.

## ஆன்டெலோப் பாறைத் தளம் - சீனா




- தென்சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய பராசல் தீவுகளில் உள்ள ஆன்டெலோப் பாறையில் (Antelope Reef) நில மீட்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டின் முதல் கட்டத்தை சீனா முடித்துள்ளது.
- மீட்கப்பட்ட பகுதி கிட்டத்தட்ட 6 கிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் ஹெலிகாப்டர் தளம், 680 மீட்டர் கப்பல் துறை, ஆழமான துறைமுகம் மற்றும் சாத்தியமான 3 கிமீ ஓடுபாதை ஆகியவற்றை உள்ளடக்கியது.

- வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவியல் ஆராய்ச்சிக்காகவே இந்த வசதிகள் என்று சீனா கூறுகிறது, அதே நேரத்தில் வியட்நாம் முழு பராசல் தீவுகளுக்கும் உரிமை கொண்டாடுகிறது; சீனா 1974 ஆம் ஆண்டு முதல் இதன் மீது உண்மையான கட்டுப்பாட்டை (de facto control) பராமரித்து வருகிறது.
- தென்சீனக் கடல் குறித்து சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் தைவான் இடையே சர்ச்சை உள்ளது; 2016 ஆம் ஆண்டு நடுவர் தீர்ப்பாயம் ஐக்கிய நாடுகளின் கடல் சட்ட சாசனத்தின் (UNCLOS) கீழ் அனுமதிக்கப்பட்ட கடல் உரிமைகளுக்கு அப்பாலான சீனாவின் வரலாற்று உரிமை கோரிக்கைகளை நிராகரித்தது.
- இந்தியாவின் கடல்சார் வர்த்தகத்தில் 55%-க்கும் மேற்பட்டவை தென்சீனக் கடல் மற்றும் மலாக்கா நீர்ச்சந்தி வழியாகச் செல்வதால், இந்த வளர்ச்சி இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பிற்கு முக்கியமானதாக அமைகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவில் புதிய டோகாமாக்குகள்





- இந்தியா 2026 ஆம் ஆண்டில் தனது இணைவு ஆராய்ச்சித் தளத்தில் இரண்டு சிறிய அளவிலான கோளக டோகாமாக்குகளை (spherical tokamaks) சேர்த்துள்ளது.
- பெங்களூருவைச் சேர்ந்த ப்ரானோஸ் ஃப்யூஷன் (Pranos Fusion) நிறுவனத்தால் உருவாக்கப் பட்ட 'பிரக்யா' 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 அன்று முடிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 அன்று தொடங்கப்பட்டது.
- காந்திநகரில் உள்ள பிளாஸ்மா ஆராய்ச்சி நிறுவனம் (IPR) அதன் கச்சிதமான கோளக டோகாமாக்கில் முதல் பிளாஸ்மாவை அடைந்ததுடன் 114 பிளாஸ்மா வெளியேற்றங்களை நடத்தியது.

- கோளக டோகாமாக் என்பது அணுக்கரு இணைவு ஆராய்ச்சிக்கான பிளாஸ்மா நடத்தையை ஆய்வு செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு சிறிய காந்த-கட்டுப்பாட்டு சாதனமாகும்.
- இந்தியாவின் இணைவு வசதிகளில் IPR-இல் உள்ள ADITYA-U மற்றும் SST-1 ஆகியவை அடங்கும், மேலும் பிரான்சில் உள்ள சர்வதேச வெப்ப அணுக்கரு பரிசோதனை உலை (ITER) திட்டத்தில் இந்தியா 9% பங்கைக் கொண்டுள்ளது.
- பிரக்யா என்பது பிளாஸ்மா கட்டுப்பாடு மற்றும் உயர் வெப்பநிலை மீக்கடத்தி (HTS) காந்தங்களுக்கான ஒரு சோதனைத் தளமாகும் என்ற நிலையில் இது வணிக ரீதியான மின் உற்பத்தி இயந்திரம் அல்ல.

# மாநிலச் செய்திகள்

## இரத்த தானம் - ஹரியானா

- இரத்த தானத்தில் ஹரியானா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவில் முதலிடம் பிடித்துள்ளது.
- ஹரியானா 2025–26 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் 5.89 லட்சம் யூனிட் இரத்தத்தை சேகரித்துள்ளதுடன் 8,189 இரத்த தான முகாம்களை ஏற்பாடு செய்துள்ளது.
- சரிபார்க்கப்பட்ட மின்னணு-ரக்த்கோஷ் (e-RaktKosh) தரவுகளின் அடிப்படையில், ஒரு மில்லியன் மக்களுக்கு இரத்த தானம் செய்ததில் மாநிலங்களில் ஹரியானா முதலிடம் பிடித்துள்ளது.
- புது தில்லி, லேடி ஹார்டிங் மருத்துவக் கல்லூரியில் அக்டோபர் 1 ஆம் தேதி நடைபெறும் தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தில் இந்திய அரசாங்கம் ஹரியானாவைக் கௌரவிக்கும்.
- மாநிலத்தின் இரத்தமாற்று உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் அமைப்பால் ஆதரிக்கப் படும் இரத்த தான நடவடிக்கைகளை இந்தத் தரவு பிரதிபலிக்கிறது.





# முக்கிய தினங்கள்

## தேசிய இந்தி மொழி தினம் 2026 - செப்டம்பர் 14

- 1949 ஆம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபை, அரசியலமைப்பின் 343 வது சரத்தின் கீழ் தேவ நாகரி எழுத்துருவில் உள்ள இந்தியை ஒன்றியத்தின் அலுவல் மொழியாக ஏற்றுக்

கொண்ட நாளை செப்டம்பர் 14 குறிக்கிறது.

- 1949 ஆம் ஆண்டு முடிவை நினைவுகூரும் வகையிலும், இந்தி மொழியின் பயன்பாடு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும் 1953 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் இந்தி மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அரசியலமைப்பின் 351-வது சரத்தானது இந்தியாவின் கலப்பு கலாச்சாரத்திற்கான வெளிப்பாட்டு ஊடகமாக இந்தியை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் வழிகாட்டுகிறது.
- இந்தி இந்தியாவின் தேசிய மொழி அல்ல; அரசியலமைப்பு எந்த மொழியையும் தேசிய மொழி என்று அறிவிக்கவில்லை, அதே நேரத்தில் 1963 ஆம் ஆண்டு அலுவல் மொழிகள் சட்டத்தின் கீழ் அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்காக ஆங்கிலமும் பயன்படுத்தப் படுகிறது.
- தேசிய இந்தி மொழி தினம் செப்டம்பர் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது, உலக இந்தி தினம் ஜனவரி 10 அன்று அனுசரிக்கப்படுகிறது (இது 1975 ஆம் ஆண்டில் நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக இந்தி மாநாட்டோடு தொடர்புடையது).




## உலக லிம்போமா விழிப்புணர்வு தினம் 2026 - செப்டம்பர் 15




- லிம்போமா மற்றும் நிணநீர் அமைப்பு (lymphatic system) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது லிம்போமா கூட்டணியால் (Lymphoma Coalition) 2004 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- லிம்போமா என்பது லிம்போசைட்டுகளை (ஒரு வகையான வெள்ளை இரத்த அணு) பாதிக்கும் இரத்தப் புற்றுநோயாகும்.
- இதன் இரண்டு முக்கிய வகைகள் ஹாட்ஜ்கின் லிம்போமா மற்றும் நாண்-ஹாட்ஜ்கின் (Non-Hodgkin) லிம்போமா ஆகும்.
- நிணநீர் அமைப்பில் நிணநீர் கணுக்கள், மண்ணீரல், தைமஸ் சுரப்பி மற்றும் எலும்பு மஜ்ஜை ஆகியவை அடங்கும்.
- வலியற்ற வீங்கிய நிணநீர் கணுக்கள், காய்ச்சல், இரவுநேர வியர்வை, சோர்வு மற்றும் விவரிக்க முடியாத எடை இழப்பு ஆகியவை பொதுவான அறிகுறிகளாகும்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Navigating Lymphoma and Chronic Lymphocytic Leukaemia (CLL) Together என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★